செய்தி வெளியீடு:1038 நாள்:27.11.2008

**இன்று 27.11.2008 தலைமைச்செயலகத்தில் மாண்புமிகு பொதுப்பணி மற்றும் சட்டத்துறை அமைச்சர் திரு.துரைமுருகன் அவர்களிடம் காவேரி பாசன பகுதிகளை நவீனப்படுத்துவது குறித்த அறிக்கையினை அரசின் நீர்வளத்துறையின் ஆலோசகர் திரு.அ.மோகனகிருஷ்ணன் வழங்கினார்கள்**

காவேரி டெல்டா பகுதிகளில் உள்ள ஆறுகள், கால்வாய்கள், வாய்க்கால்கள், கிளை வாய்க்கால்கள், கட்டிடங்கள், வடிகால்கள் ஆகியவற்றையெல்லாம் நவீன படுத்தவேண்டும் என்பது அந்த பகுதி மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையாகும்.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் உத்தரவின்பேரில் கல்லணைக்கு கீழ் உள்ள பாசன அமைப்புகளையெல்லாம் நவீனப்படுத்த ஒரு திட்டத்தை உருவாக்க கடந்த 2007ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 9ம் தேதியன்று பாசன அனுபவம் பெற்ற பொறியாளர்கள், வேளாண்மைத்துறை அலுவலர்கள் மற்றும் நீர்ப்பாசனத்துறையிலே அனுபவம் பெற்ற 14 உறுப்பினர்களை கொண்ட ஒரு பணிக்குழு (Task Force) திருச்சி மண்டல தலைமைப்பொறியாளர் தலைமையில் அமைக்கப்பட்டது. தமிழக அரசின் நீர்வளத்துறையின் ஆலோசகர் திரு.அ.மோகனகிருஷ்ணன் அவர்களின் ஆலோசனையின்படி அந்த குழு செயல்பட்டது.

2008–09ஆம் ஆண்டு பொதுப்பணித்துறையின் மானிய கோரிக்கையின் போது இந்த அறிவிப்பு முதல்வரின் உத்தரவின் பேரில் பொதுப்பணித்துறை அமைச்சர் அறிவித்தார்.

அந்த குழு பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டு, விவசாய பெருங்குடி மக்களை சந்தித்து அதன்பிறகு ஒரு அறிக்கையை தயார் செய்து 27.11.2008 அன்று மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களிடம் சமர்ப்பித்திருக்கிறார்கள். இத்திட்டத்தின் மூலம் ஆறுகள் மற்றும் கால்வாய்களின் கரைகள் உயர்த்தப்பட்டு, பலப்படுத்தப்பட்டு அவசியம் உள்ள பகுதிகளில் கற்கட்டிடங்கள் ஏற்படுத்தப்படும். பாசனக் கால்வாய்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட கால்வாய்களில், சிமெண்ட் பலகைகள் பொறுத்தி பாசன நீர்க்கசிவை குறைத்து நீர் வேகமாக சென்று பாசனத்திற்கு தடையின்றி கிடைக்க வகை செய்யப்படும். ஏறக்குறைய 100 ஆண்டுகளுக்கு மேல் செயல்பட்டு வரும் கட்டுமானங்கள் மேம்படுத்தப்படும். புது கட்டுமானங்கள் தேவையான இடங்களில் கட்டவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. நவீனப்படுத்தப்பட்ட பிறகு பாசனத்திற்கு சரிவர நீர் கிடைக்கும், நீர் விரையமாகாமல் பாசனத்திறன் மேம்படும்.

இத்திட்டத்தின் மூலம் காவேரி – வெண்ணாறு பாசன பகுதி, கல்லணை கால்வாய் பாசன பகுதி மற்றும் கீழணை பாசன பகுதிகளில் உள்ள சுமார் 17 இலட்சம் ஏக்கர் பயன் பெறும். இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ. 5100 கோடியாகும்.

வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9